JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//563 /2024 |
| | : | Prosecution P.W - 25 |
| NAME | : | ஜானகி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 12.11.2024

**முதல் விசாரணை**

நான் வெய்காலிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி, சீதாலெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்துலெட்சுமி, செல்வக்குமாரி, முருகன், சரோஜா, மணிராஜ், பொன்சேகர், ரவிக்குமார், ஜெயஜோதி ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் வாரச்சீட்டு, மாதச்சீட்டு நடத்தினார்கள். நான் ரூ.33000 வாரச்சீட்டில் ஒரு சீட்டும், ரூ.62000 வாரச்சீட்டில் இரண்டு சீட்டும் போட்டிருந்தேன்.

நான் ரூ.33000 வாரச்சீட்டில் 72 வாரங்கள் செலுத்தினேன். நான் மொத்தம் ரூ.16050 செலுத்தினேன்.

நான் ரூ.62000 வாரச்சீட்டில் 123 வாரங்கள் செலுத்தவேண்டும். நான் 123 வாரங்கள் பணம் செலுத்தினேன். நான் மொத்தம் இந்த சீட்டுக்கு 86600 ரூபாய் செலுத்தினேன்.

நான் எல்லா சீட்டுக்கும் சேர்த்து ரூபாய். 1 லட்சத்து 2 ஆயிரத்து அறுநூற்று சில்லரை செலுத்தினேன்.

2019 ம் ஆண்டு பொங்கல் வரை செலுத்தினேன். அதற்கு பிறகு சீட்டு செலுத்தபோனபோது ஆஜர் எதிரிகள் இல்லை. 10 மாதம் கழித்து ஆஜர் எதிரிகள் வந்தார்கள். கோவில் பக்கத்தில் கிருஷ்ணன் என்பவர் பணம் கேட்டபோது நானம் போனேன். அப்போது தேவடிய மகளே, புண்ட மகளே என்று ஏசினார்கள். ரூபாய் கேட்டால் அடித்து கொன்றுவிடுவோம் என்று சொன்னார்கள். பயந்துபோய் வீட்டுக்கு போய்விட்டு மாலையில் காவல் நிலையம் சென்றோம். கிருஷ்ணன் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். நாங்கள் எழுபது பேர் அளவில் காவல் நிலையம் சென்றோம். எனக்கும் பணம் கிடைக்கவில்லை. வேறுயாருக்கும் பணம் கிடைக்கவில்லை.

நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//563 /2024 |
| | : | Prosecution P.W - 24 |
| NAME | : | ஜெயஜோதி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 12.11.2024

முதல் விசாரணை

நான் வெய்காலிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி, சீதாலெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்துலெட்சுமி, செல்வக்குமாரி, முருகன், சரோஜா, மணிராஜ், பொன்சேகர், ரவிக்குமார் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரில் வாரச்சீட்டு, மாதசீட்டு என்று ஏலம் நடத்தினார்கள். நான் ரூ.33000 வாரச்சிட்டில் ஒரு சீட்டும் ரூ. 50000 வாரச்சீட்டில் 2 சீட்டும் போட்டிருந்தேன்.

நான் ரூ. 33000 சீட்டில் 72 வாரங்கள் செலுத்தினேன். நான் மொத்தம் 16050 ரூபாய் செலுத்தினேன்.

நான் ரூ. 50000 சீட்டில் 42 வாரங்கள் 2 சீட்டுக்கள் செலுத்தினேன். நான் மொத்ம் ரூபாய். 34 ஆயிரத்தி சில்லரை செலுத்தினேன்.

மொத்தம் நான் செலுத்திய பணம் ரூபாய். 50830 ஆகும்.
ரூ.33000 சீட்டில் 111 வாரங்கள் செலுத்தவேண்டும் ரூ.50000 சீட்டில் 101 வாரங்கள் செலுத்தவேண்டும். ஆஜர் எதிரிகள் 2019 பொங்கலின்போது சென்றுவிட்டதால் அதற்கு பிறகு சீட்டு செலுத்த முடியவில்லை. அதற்கு பிறகு 10 மாதம் கழித்து ஆஜர் எதிரிகள் வந்திருந்தார்கள். அப்போது கிருஷ்ணன் பணம் கேட்க போயிருந்தார். நானும் கேள்விபட்டு பணம் கேட்க காலை 7.00 மணியளவில் போனேன். அப்போது ஆஜர் எதிரிகள் என்னை தேவடிய மகளே, புண்ட மகளே என்று அசிங்கமாக பேசினார்கள். பணத்தை கேட்டால் கொன்று விடுவோம் என்றுமிரட்டினார்கள். அதற்கு பிறகு அன்றேக்கு சாயங்காலம் காவல் நிலையம் சென்றோம். கிருஷ்ணன் புகார் கொடுத்தார். எதிரிகள் பேசியதால் எனக்கு அசிங்கமாக ஆகிவிட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள். அதற்கு பிறகும் பணம் கிடைக்கவில்லை. என்னைபோல் எழுபது பேர் இருப்பார்கள்.

நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//563 /2024 |
| | : | Prosecution P.W - 23 |
| NAME | : | **ரவிக்குமார்** |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 12.11.2024

**முதல் விசாரணை**

நான் மையிலப்பபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் செங்கமாலில் வேலை செய்து வருகிறேன். ஆஜர்எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி, சீதாலெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்துலெட்சுமி, செல்வக்குமாரி, முருகன், சரோஜா, மணிராஜ், பொன்சேகர் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் மாயவன் கோவிலில் சீட்டு பிரித்தார்கள் அந்தக்கோவில் எனது கோவிலுக்கு அருகில் உள்ளது. ஆஜர் எதிரிகள் மாதசீட்டு, வாரசீட்டு ஏலம் நடத்தினார்கள் நான் ரூ.50000 வாரச்சீட்டில் ஒரு சீட்டு சேர்ந்தேன். 101 வாரங்கள் மொத்த சீட்டு செலுத்தவேண்டும். நான் 42 வாரங்களுக்கு ரூ.17390 செலுத்தினேன். அதற்கு பிறகு நான் சீட்டு செலுத்தபோனபோது அங்கு ஆள் இல்லை

என்பதால் திரும்பி வந்துவிட்டேன். 2019 பொங்கல் நேரத்தில் நான் பணம் செலுத்த போனபோது ஆள் இல்லை. அதற்கு பிறகு அந்த ஊரில் உள்ளவர்கள் என்னிடம் ஆஜர் எதிரிகள் வெளி ஊருக்கு தப்பி சென்றுவிட்டார்கள் என்று சொன்னார்கள். பின்பு 10 மாதம் கழித்து ஆஜர் எதிரிகள் வந்திருப்பதாக சொன்னார்கள். நான் ஆஜர் எதிரிகளின் வீட்டிற்கு சென்றேன். அக்டோபர் மாதத்தில் சென்றேன். காலை 7.00 மணிக்கு சென்றேன். சீட்டு போட்டுருந்த கிருஷ்ணன் என்பவர் தேவடியமகனே, புண்ட மகனே என்று பேசினார்கள். நானும் கேட்டபோது என்னையும் அதே வார்த்தையால் திட்டினார்கள். சீட்டு போட்டதற்க ஆதாரம் எதுவும் இல்லை, எங்கு வேண்டுமானலும் பார்த்துகோ என்று பேசினார்கள். எல்லோரும் காவல் நிலையம் சென்றோம். மாலை 5.00 மணி அளவில் காவல் நிலையம் சென்றோம். கிருஷ்ணன் புகார் கொடுத்தார். அதற்கு பிறகு பணம் கிடைக்கவில்லை என்னுடன் சீட்டு செலுத்திய எழுபது, எண்பதுபேருக்கு பணம் கிடைக்கவில்லை. பெண் போலிஸ் inspector விசாரித்தார்கள்.

நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi